சிங்கப்பூர் வாழ் தமிழ்ப் பேராசிரியர் சுப.திண்ணப்பன் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்திப்பு!

பொன்னாடை அணிவித்து, புத்தகம் வழங்கி சிறப்பு செய்தார்!

சிங்கப்பூர், மே 26-

சிங்கப்பூர் வாழ் தமிழ்ப் பேராசிரியர் சுப.திண்ணப்பன் அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்துப் பேசினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு, அந்நாடுகளுடன் தமிழ்நாட்டிற்கு உள்ள பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் வகையிலும், உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024க்கு அழைப்பு விடுக்கும் வகையிலும் மற்றும் தமிழ்நாட்டில் முதலீடுகள் மேற்கொள்ளும் நோக்கத்திலும், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (25.05.2023) சிங்கப்பூர் வாழ் தமிழர், தமிழ் பேராசிரியர் சுப.திண்ணப்பன் அவர்கள் மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார்.

தமிழ்ப் பேராசிரியர் சுப.திண்ணப்பன் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவார். இவர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அதிராம்பட்டினம் கல்லூரி, மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளின் பல்கலைக்கழகங்களில் பணியாற்றியுள்ளார்.

தமிழ்ப் பேராசிரியர் சுப.திண்ணப்பன் அவர்கள், கடந்த பல ஆண்டுகளாகச் சிங்கப்பூரில் தமிழ் மற்றும் மொழியியல் பேராசிரியராகப் பணியாற்றி உள்ளார்.

அங்கு தமிழ்மொழிப் பாடத்திட்டக்குழு, பாட நூல் உருவாக்கம் ஆகியவற்றிலும், கல்வி அமைச்சகத்தின் குழுக்களிலும் மிக முக்கியப் பங்காற்றி வருகிறார். இவர் ஆற்றிய தமிழ்ச் சேவைக்கு பல்வேறு நாடுகள் மற்றும் மாநிலங்களின் சார்பில் இருபதுக்கும் மேற்பட்ட விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

சிங்கப்பூர் நாட்டின் முன்னாள் குடியரசுத்தலைவர் காலஞ்சென்ற பெருமதிப்பிற்குரிய எஸ்.ஆர். நாதன் அவர்களுக்கு தமிழ் பயிற்றுவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களை சந்தித்த 88 வயதான முனைவர் சுப.திண்ணப்பன் அவர்களுக்கு, அவர் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆற்றிய சேவைகளைப் பாராட்டி அவருக்கு முதலமைச்சர் அவர்கள் சால்வை அணிவித்து, புத்தகம் வழங்கி சிறப்பு செய்தார்.

முதலமைச்சர் அவர்களை சந்தித்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய முனைவர் சுப.திண்ணப்பன் அவர்கள், "நான் தமிழ் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரால் தான் வந்தது. திருவாரூரில் நான் படித்துக் கொண்டு இருந்த போது தான் முதன்முதலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பேச்சைக் கேட்டேன். அப்போதுதான் எனக்கு தமிழ் உணர்வு வந்தது, தமிழ் ஆசிரியராக வேண்டும், தமிழ் பேராசிரியராக வேண்டும் என்ற வேட்கை வந்தது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக பெண்களுக்கு இலவசப் பேருந்து பயணச் சலுகை, பெண்கள் கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதற்காக பல்வேறு புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். அதுபோல மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் செயல்படுத்தி வருவது போன்றவை பாராட்டுக் குரியவை.

கல்வி, பெண்கள் முன்னேற்றம் மற்றும் தமிழ் வளர்ச்சி ஆகியவற்றை தனது முழு மூச்சாகக் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார். இப்போது தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக சிங்கப்பூர் வந்துள்ளார்.

நேற்று சிங்கப்பூர் தமிழ் அமைப்புகளின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிங்கப்பூருக்கும் தமிழுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு பற்றியும், சிங்கப்பூரில் தமிழ் வளர்ச்சிக்காக பாடுபட்டவர்களை பாராட்டியதும் எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது" என்று தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி மையம் அறிவியல் போட்டியில் வெற்றி பெற்று நாசா விண்வெளி மையத்திற்குச் செல்லும் திண்டுக்கல் அய்யம்பாளையம் மாணவி ஆர்.தாரணி ஊரக வளர்ச்சித்துறை ஐ.பெரியசாமியிடம் வாழ்த்துப் பெற்றார்.

அறிவியல் போட்டியில் வெற்றி பெற்று நாசா விண்வெளி மையத்திற்குச் செல்லும் அய்யம்பாளையம் மாணவி

ஆர்.தாரணி அமைச்சர் ஐ.பெரியசாமியிடம் வாழ்த்துப் பெற்றார்!

சின்னாளபட்டி,மே 26-

அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி மையம் நடத்திய அறிவியல் போட்டியில் வெற்றி பெற்று நாசா விண்வெளி மையத்திற்குச் செல்லும் திண்டுக்கல் அய்யம்பாளையம் மாணவி ஆர்.தாரணி ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமியிடம் வாழ்த்துப் பெற்றார் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுதுறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கு கொண்டுசெல்வதாக அமைச்சர் ஐ.பெரியசாமி அறிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் அய்யம்பாளையத்தைச் சேர்ந்த மாணவி ஆர்.தாரணி இவர் ஈரோடு அருகே உள்ள இராமநாதபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் படித்து வருகிறார். அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி மையம் ஈரோடு ஏ.ஜி.ஆர். கல்வி அறக்கட்டளை இணைந்து நடத்திய அறிவியல் போட்டிகளில் நூற்றுக் கணக்கான மாணவர்கள் பங்கேற்றனர். கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற இந்த போட்டிகளில் நாசாவுடன் இணைந்து விண்வெளி ஆய்வு மேற்கொள்ளும் கியூபன் இன் ஸ்பேஸ் என்ற அமைப்பு பல்வேறு போட்டிகள் நடத்தியது.

இதில் ஏ.ஜி.ஆர். கல்வி அறக்கட்டளையில் பயின்ற 11 மாணவர்கள் பயிற்சி பெற்றனர். சென்னையைச் சேர்ந்த ஏரோலான்ஞ்ச் இந்திய அமைப்பின் பயிற்சியாளர் ஹேமபிரசாத் மாணவர்களுக்கு பயிற்சி அளித்தார். 11 மாணவர்களும் விண்வெளியில் ஊதப்பட்ட மென் ரோபோட்களின் செயல்பாடுகள் குறித்து பகுப்பாய்வு என்ற தலைப்பில் ஆய்வு செய்து ஆராய்ச்சி திட்டத்தை அனுப்பி வைத்தனர். இந்த திட்டம் கியூபஸ் இன் ஸ்பேஸ் அமைப்பால் அங்கிகரிக்கப்பட்டு நாசா மூலம் செயல்பட தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பரிசோதனை ஜீன் மாதம் 19ம் தேதி முதல் 23ம் தேதிக்குள் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் நடைபெற உள்ளது. இதனால் இந்த திட்டம் சார்ந்து மாணவ - மாணவிகள் மற்றும் அவர்களின் பயிற்சியாளர்களை நாசா விண்வெளி மையம் அழைத்துள்ளது.

இதற்காக திண்டுக்கல் மாவட்டம் அய்யம்பாளையத்தைச் சேர்ந்த ஏழை மாணவி ஆர்.தாரணி அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி மையத்திற்குச் செல்கிறார். ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், திமுக மாநில துணைப்பொதுச்செயலாளரும், ஊரகவளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி தனது தொகுதிக்கு உட்பட்ட அய்யம்பாளையத்தைச் சேர்ந்த மாணவி தாரணியை நேரில் அழைத்து பாராட்டியதோடு நிதியுதவி அளிப்பதாகவும் உறுதியளித்தார்.

மேலும் அரசு பள்ளியைச் சேர்ந்த ஏழை மாணவி தாரணி அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி மையத்திற்குச் செல்வது குறித்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கு கொண்டுசெல்வதாகவும் கூறியதோடு மாணவி மென்மேலும் அறிவியல் துறையில் மேம்பட வேண்டுமென்று வாழ்த்தினார்.

நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமைச்செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் நகர துணை மேயர் ராஜப்பா, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, அய்யம்பாளையம் பேரூர்கழக திமுக செயலாளர் தங்கராஜ், ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் பஞ்சம்பட்டி மணி, ஒன்றிய வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பொதுக்குழு உறுப்பினர் அக்பர் அலி, விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் நெல்லூர் மலைச்சாமி, மாவட்ட பிரதிநிதி எல்லைப்பட்டி இராமகிருஷ்ணன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள் நெல்லை சுபாஷ், ஆனந்தன், அமைச்சர் முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், தி.மு.க. நிர்வாகி நந்தி நடராஜன், டாஸ்மாக் வடிவேல், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் மஸ்தான் பங்கேற்பு!

செஞ்சி கிழக்கு ஒன்றியத்தில் தெருமுனைக் கூட்டம்!

ஈரோடு இறைவன் சிறப்புரை!

செஞ்சி மே 26-

செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞரணி சார்பில் புதுப்பேட்டையில் நடந்த தெருமுனைபிரச்சாரக் கூட்டத்தில் அமைச்சர் செஞ்சிமஸ்தான் சிறப்புரையாற்றினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணிசார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சார கூட்டம் புதுப்பேட்டையில் நடைபெற்றது. செஞ்சி கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பழனி தலைமை தாங்கினார். ஒன்றிய துணை செயலாளர் குமார் அறிமுக உரையாற்றினார். ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பழனி, பால கிருஷ்ணன், செந்தில் முருகன், ஷேக் வாகித், ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளரும் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவருமான விஜய குமார் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில்விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான், தலைமைக் கழக பேச்சாளர் ஈரோடு இறைவன் ஆகியோர் கலந்து கொண்டு தி.மு.க. அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளைவிளைக்கி சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கழகத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிறைவாக கணபதி நன்றி கூறினார்.

அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் தலைமை! காரைக்குடி-குன்றக்குடியில்

ஒன்றியச் செயலாளர்கள் இல்லத்திருமணம்! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்தார்!

அமைச்சர் எஸ்.ரகுபதி - மா.சுப்பிரமணியன் - சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்பு!

சிவகங்கை, மே 26-

சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி கிரிஸ் திருமண மஹாலில் கண்ணன்குடி ஒன்றிய செயலாளர் லெ.மு.ரவிச்சந்திரன் திருமதி ஆர் சௌந்தரியின் மகள் பொறியாளர் ர.சிவசக்தி-முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் காரை இரா. செழியன்திருமதி மல்லிகா மகன்பொறியாளர் செ.தமிழ்வாணன் ஆகியோரது திருமணம், குன்னக்குடியில் கல்லல் மேற்கு ஒன்றிய செயலாளர் குன்னக்குடி சுப்பிரமணியன் - திருமதி லலிதா மகள். எஸ்.கிருஷ்ணவேணி - மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பெருமங்கலம் தலைமைசெயற்குழு உறுப்பினர் இராம.இளங்கோவன் திருமதி ராதிகா மகன் இள.பவித்திரன் ஆகியோரது திருமணமும், சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது.

கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி சிறப்புரை ஆற்றினார்.

மணமக்களை வாழ்த்தி தவத்திரு குனறக்குடி பொன்னம்பல அடிகளார், அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, மா.சுப்பிரமணி யன் சிவ.வீ. மெய்ய நாதன், திருமதி தமிழரசி ரவிக்குமார்,எம்.எல்.ஏ. முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினார்கள்.

இந்த மணவிழா நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர்கள் த.சேங்கை மாறன்,திருமதி ஜோன்ஸ் ருசோ, கே.எஸ்.எம். மணிமுத்து, மாவட்ட பொருளாளரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான சுப. துரை ராஜ், முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன், பெரியண்ணன்அரசு, மாரியப்பன் கென்னடி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், துணை அமைப்பாளர்கள் சிக்கந்தர் பாதுஷா,. செ.தமிழ் நம்பி, நகர கழகச் செயலாளர்கள் என்.குணசேகரன், பெரி. பாலா, க.பொன்னுச்சாமி, துரைஆனந்த் ஒன்றிய கழகச் செயலாளர்கள் சுப.சின்னத்துரை, கே .ஆர். ஆனந்த், நாகனி ரவி பூபால சிங்கம், எஸ் .சண்முக வடிவேலு விராமதி மாணிக்கம், கே.பாலசுப்பிர மணியன், பூமணி, துரை.ராஜாமணி, எம்அண்ணாத் துரை, எம். ஜெயராமன் திருமலை முத்துராம லிங்கம், கடம்ப சாமி, கா.வெங்கட்ராமன், யோக

கிருஷ்ணகுமார், வே. தமிழ்மாறன், பொதுக்குழு உறுப்பினர்கள் த.உதயகுமார், கரு.அசோகன், அம்பலமுத்து, பள்ளத்தூர் கே. எஸ். ரவி, பேரூர் கழக செயலாளர்கள் கதிர்வேல் , ஆர்.கார்த்தி கேயன், மாவட்ட மகளீரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் துணை அமைப்பாளர் கள் மணிமேகலை மார்கரெட்கமலா திலகவதி கண்ணன் மாவட்ட மகளீர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதாசெந்தில் , மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ். நாராயணன், துணை அமைப்பாளர் துரை.நாகராஜ், பேரூராட்சி தலைவர்கள் திருமதி கோகிலா ராணி நாராயணன், ராதிகா, சோலை,

மாநில மாணவரணி துணை அமைப்பாளர் திருமதி பூர்ணிமாசங்கிதா மயிலாடுதுறைதொகுதி முன்னாள் எம்.எல்.ஏ., கே. ஜெகவீரபாண் டியன், குத்தாலம் முன்னாள் ஒன்றிய குழு தலைவர் ராம. மனோகரன் பொதுக்குழு உறுப்பினர் வெற்றிவேல், முன்னாள் எம்.எல்.ஏ. என்.சுந்தரம்

நிர்வாகிகள் முத்துக்குமார் சொ.கண்ணன் சேவியர் முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சீ.இரவி மாவட்ட இலக்கிய அணி தலைவர் புலிக்குத்தி சீனிவாசன் பொருளாளர் அழகையா, ஒன்றிய கவுன்சிலர் மருது பாண்டியன் ரமேஸ், சிவபுரிசேகர் கல்லல் ஒன்றியக் குழு தலைவர் திருமதி சொர்ணம்அசோகன், இளைஞ ரணி அயூப்கான் உட்பட ஒன்றிய கழக நிர்வாகிகள் அனைத்து கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

திருமணத்திற்கு வந்திருந்த வர்களை ஒன்றிய செயலாளர்கள் லெ.மு. ரவிச்சந்திரன் திருமதி ஆர். சௌந்தரி, ஆர். முத்துராமலிங்கம், திருமதி மல்லிகாசெழியன், செ.தமிழ் நம்பி த.வைஷாலி, குன்னக்குடி சுப்பிர மணியன், திருமதி லதா இராம.இளங்கோவன், திருமதி இராதிகா ஆகியோர் வரவேற்றார்கள்.

முன்னதாக நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 11மணிஅளவில் திருச்சி விமான நிலையத்திலிருந்து காரைக்குடிக்கு வருகை தந்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் தலைமையில் அளிக்கப்பட்ட வரவேற்பில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. உட்பட மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிவிப்பு!

தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் இன்று (26.5.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 4 மணிக்கு, மாவட்டக் கழக அலுவலகத்தில் அவைத் தலைவர் எஸ். அருணாச்சலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி மாவட்ட அமைப்பாளர்கள், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா.
கழக உறுப்பினர் சேர்ப்பு நிறைவு செய்தல்.
கழக ஆக்கப் பணிகள்.

அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்
செயலாளர்
தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிவிப்பு!

திருநெல்வேலி மத்திய மாவட்ட தி.மு.க.செயல்வீரர்கள் கூட்டம் நாளை (27.05.2023-சனிக்கிழமை) மாலை 5 மணி அளவில், மாவட்ட அவைத் தலைவர் வி.கே.முருகன் தலைமையில், திருநெல்வேலி சந்திப்பு ஆர்.கே.வி.திருமண மஹாலில் நடைபெற உள்ளது. இதில் சிறப்பு அழைப்பாளராக, திருநெல்வேலி மாவட்ட பொறுப்பு அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கலந்துகொண்டு சிறப்பிக்கிறார்.

எனவே, இந்நாள், முன்னாள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட, கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு துவக்கவிழா குறித்து
உறுப்பினர் சேர்த்தல் குறித்து
கழக ஆக்கப் பணிகள்

டி.பி.எம்.மைதீன்கான்
பொறுப்பாளர்
நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க.

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி கழக அரசின் 2 ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக்கூட்டம் பாளை தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் இட்டேரியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜான்ரபீந்தர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று கழக அரசின் சாதனைகளை விளக்கி பேசினார். உடன் ஆவின் ஆறுமுகம், கணேஷ்குமார் ஆதித்தன், ராமச்சந்திரன், செல்வகூடாமணி, முருகன் உள்பட கழக நிர்வாகிகள்,திரளாக பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் காளாஞ்சிபட்டியில் புதிதாக கட்டப்பட்டு வரும் போட்டி தேர்வுக்கான பயிற்சி மைய கட்டிடத்தை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி பார்வையிட்டார். உடன் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் எம்.என். பூங்கொடி ஐ.ஏ.எஸ்., ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் ஆகியோர் கலந்து கொண்டனர்.